**இலங்கை தென் மேற்குப் பகுதியில் நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டம் (கட்டம்- 01) -2024**

---

இலங்கை தென் மேற்குப் பகுதியில் நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டத்தின் (கட்டம்- 01) 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 யூன் 01 ஆந் திகதிய சீஎல்கே 1013 - 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு மற்றும் 2016 மார்ச் 16 ஆந் திகதிய சீஎல்கே 1013-02 எல் ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கை மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக அமுலாக்கும் முகவராக உள்ளது.

நீர்கொழும்பு மாநகர சபை பகுதியில் 73,000 மக்களிற்கான கழிவுநீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு முறைமை விரிவுபடுத்தல் மற்றும் சுகாதார சேவைகளிற்கான நுழைவுகளை முன்னேற்றுதல், நீர் மற்றும் சுகாதார துறை கட்ட வேலைகளை தெளிவுபடுத்தல் தரமுயர்த்துதல், வறுமைக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட வறுமைக் குறைப்பிற்கு ஆதரவான கொள்கைகள் விருத்தி செய்வதன் ஊடாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களிற்கான சேவைக்கு நுழைவு வசதிகள், கடற்கரை மற்றும் கடற்கரை சுற்றுச்சூழல் முறைமை பாதுகாப்பு பன்முகப்படுத்தப்பட் உயிரியல் பராமரிப்ப போன்ற செயற்திடடத்தின் நோக்கங்களாகும்.

செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 18,739.81 மில்லியனிற்கு சமமான யூரோ 107.70 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,224 மில்லியனிற்கு சமமான யூரோ 76 மில்லியன் கடனாகவும் ரூபா 991.81 மில்லியனிற்கு சமமான யூரோ 5.70 மில்லியன் மானியமாகவும் பிரான்ஸ் டி அபிவிருத்தி முகவர் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 4,524 மில்லியனிற்கு சமமான யூரோ 26 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கபட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. செயற்திட்டமனது கடனளிக்கும் முகவரால் பணக் கைதவிர்தலை நிறுத்தியமையால் 2023 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 465 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணம், ரூபா 61 மில்லியன் நெறிப்படுத்தல் கட்டணம் மற்றும் ரூபா 16 மில்லியன் கடன் வட்டி என்பன நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மீதி மற்றும் நடைபெறும் வேலைகள் ரூபா 542 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மேறகுறித்த செயற்திட்டம் மானிய நிதியளிக்கப்பட்ட செயற்திட்டமாக உள்ளது. சொல்லப்பட்ட செயற்திட்டம் தொடர்பான கடப்பாட்டுக் கட்ணங்கள் மற்றும் கடன் வட்டி நிதி அமைச்சால் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்கீட்டுத் தவறுகள் திருத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டமானது 2016 யூனில் தொடங்கி 2022 யூன் அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மூன்று பிரதான கூறுகளைக் கொண்டுள்ளது. நீர்கொழும்பு பகுதிக்கு விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்களை தயாரித்தல் மற்றும் காலிப் பகுதிக்கு விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்களை தாரிப்பத்தல் போல நீர்கொழும்பு, காலி மற்றும் உணவத்தை ஆகிய மூன்று பகுதிகளிற்குமாக ஆரம்ப வடிவமைப்புகளின் சாத்திய வளக் கற்கை 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதிய RAMP குழுப் பரிந்துரைகள் அடிப்படையில் செயற்திட்டத்தை 2023 ஏப்ரல் 30 இல் தற்காலிகமாக நிறுத்திய போது பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

| செயற்திட்டக் கூறு | 2024 திசெம்பரி 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | | |
| நீர்கொழும்பு நகர சாத்திய வள கற்கை மற்றும் கழிவகற்றல் உட்கட்டமைப்பு நிர்மாணம் மற்றும் காலி / உகணவத்த மற்றும் களணி / பேலியகொடை பகுதிகளிற்காக கழிவகற்றல் உட்கட்டமைப்பிற்கான சாத்தியவளக் கற்கை மற்றும் கேள்வி ஆவணங்களை தயாரித்தல் மற்றும் கழிவகற்றல் துறையில் தொழில்நுட்ப உதவி மற்றும் இயலளவை கட்டியொழுப்புதல் | 100 | 12 | வேலை ஒப்பந்தங்கள் வழங்கப்படவில்லை மற்றும் இரத்து செய்த காலத்தில் இருந்த கடன் தொகை பரிந்துரைத்த கடன் தொகையின் அண்ணளவாக 94 சதவீதம் பயன்படுத்தப்பட்டது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் ஏழு ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ந்திருந்த செயற்திட்ட தகராறு காரணமாக 12.31 சதவீதம் மாத்திமேயாகும். | பல்வேறு காரணங்களால் செயற்திட்ட வேலைகள் தாமதப் பட்டிருந்ததுடன் கடன் குறைவாக பயன் படுத்தப்பட்டிருந்தது | செயற்திட்டத்தை மீள தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செற்திட்டத்தில் ஏற்பட்ட ரூபா 1,669 மில்லியன் மொத்தக் கிரயமானது இலங்கை அரசாங்கத்திடமிருந்தான ரூபா 221 மில்லியன் மற்றும் கடனளிக்கும் நிறுவனத்திடமிருந்தான ரூபா 1,448 மில்லியன் என்பவற்றினைக் கொண்டுள்ளது. அதில் ரூபா 1,425 மில்லியன் தொகை நீர்கொழும்பு சுத்திகரிப்பு பொறியின் விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்கள் தயாரித்தல், காலி, உகணவத்த மற்றும் களணி பகுதிகளில் சுத்திகரிப்பு முறைமையில் சாத்தியவளக் கற்கை மற்றும் அடிப்படை வடிவமைப்பு மீதான ஆலோசனை ஒப்பந்தத்தின் கீழ் | நீர்கொழும்பு கழிவகற்றல் செயற்திட்டத்திற்காக வடிவமைப்பு மற்றும் கெள்விகள் பூர்த்தியாக்கப் பட்டிருந்த போதிலும் பௌதீக வேலைகள் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு பட்டியலிடப்பட்ட காலப் பகுதிக்குள் செயற்திட்ட வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |

செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சகல பிரதான நிர்மாண நடவடிக்கைகளும் எந்தவொரு பௌதீக அல்லது நிதி முன்னேற்றங்களும் இல்லாமல் கொள்வனவு கட்டத்திலேயே இருந்தது

**3.3 செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு முரணான நடவடிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 நவம்பர் 07 ஆந் திகதிய 23/1879/611/027 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சின் செயலாளர் கடன் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளின் பின்னர் அவற்றின் மீதான குறித்த நிதியளிப்பை இனங்கண்டு செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தேவையான படிமுறைகளை எடுப்பதற்கு நெறிப்படுத்தியிருந்தார். எவ்வாறாயினும், இந்த நெறிப்படுத்தல் பிரச்சனை செயலாளர் செயற்திட்டம் உத்தியோகபூர்வமாக நிறுத்தப்பட்டது அல்லது தொடருகின்றது என்பதை எந்தவொரு உறுத்திப்படுத்தலும் இல்லாமல் வழங்கியிருந்தார் | கடனளிக்கும் நிறுவனங்களுடன் தங்களுடைய கணக்கிலுள்ள நிலுவையாக இருக்கின்ற தொகைகள் 2024/12/31 மற்றும் 2025/03/24 இல் ERD இற்கு வழங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் நிதிகள் உரிய கடனளிக்கும் நிறுவனங்களிற்கு செலவு வைக்கப்பட்டிருக்காமையால் ERD ஆல் தாமதப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டது. | அமைச்சரவை தீர்மானம் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டமானது இலங்கை அரசாங்கத்தின் பிரச்சனையால் அதன் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளை அடையாமல் ரூபா 1,890 மில்லியன் ஆரம்ப கிரயம் ஏற்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. முழுச் செலவினமும் மூழ்கிய செலவாக மாறும் ஆபத்தல் உள்ளது. செயற்திட்டம் அமுலாக்காமை அததியாவசிய கழிவகற்றல் ஊடாக சுற்றுலாத்துறையின் பொருத்தமான அபிவிருத்திக்கு உதவுவதற்கு குறிப்பிடப்பட்ட நேரடி இழப்புகள் மாத்திரம் விளைந்திருக்கவில்லை ஆனால் நீர்கொழும்பு, காலி, உகணவத்த மற்றும் களணியில் சுற்றுலா நடவடிக்கைகளின் வளர்ச்சி மற்றும் தொடர்ச்சி ஆபத்தில் உள்ளது. உடனடியான மற்றும் நீண்ட கால பொருளாதார | செயற்திட்டமானது இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானங்களால் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. | செயற்திட்ட கிரயங்களின் இழப்பு மீது இருக்கின்ற ஆபத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நன்மைகள் இரண்டும் நாட்டிற்கு இழப்பை உண்டாக்கும்.

**3.4 வளங்களின் குறைபயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் 2022 யூன் 30 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஆண்டுகள் கடந்த பின்னர் செயற்திட்டம் 12.31 சதவீத பௌதீக முன்னேற்றத்தை மாத்திரம் அடைந்திருந்தது. அதேநேரம் AFD ஆனது யூரோ 76 மில்லியன் கடனாகவும் யூரோ 5.7 மில்லியன் மானியங்களிலும் பங்களித்திருந்தது. எவ்வாறாயினும் கடனில் யூரோ 4.74 மில்லியனும் (6 சதவீதம்) மானியத்தில் யூரோ 2.14 மில்லியன் (38 சதவீதம்) மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதனால் மானியம் கடனின் மிகுதி தொகையை இரத்து செய்வதில் விளைந்தது. | பொது மக்கள் எதிர்ப்புகளால் விளைந்த காணிச் சுவீகரிப்பு தாமதம் கழிவகற்றல் செயற்திட்டத்திற்காக காணிகள் தெரிவு செய்தலை பாதித்திருந்ததுடன் காணி அமைந்த இடத்தில் இறைக்கும் இல்லங்கள் மற்றும் கழிவகற்றல் முறைமை வடிவமைப்பின் நேரடியான தலையீடுகள் தொடர்புபட்ட நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்க முடியாதிருந்தது. | கடன் நிதி வினைத்திறனான பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிகளின் மெதுவான பயன்பாடு மீளாய்வு காலத்தின் போது ரூபா 465 மில்லியன் கடப்பாட்டு கட்டணங்களை ஏற்படுத்தி அரசாங்கத்தில் விளைந்தது அந்த கட்டணங்கள் நாட்டிற்கு எந்தவொரு பொருளாதார நன்மைகளும் இல்லாமல் இருந்தது. | மேற்குறிப்பிட்ட பல்வேறு காரணங்களால் செயற்திட்டம் உடன்பட்ட கடன் காலப் பகுதிக்குள் பூத்தியாக்க இயலாதிருந்தது. | கடன் நிதி வினைத்திறனான பயன்படுத்தப்பட வேண்டும். |